# ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:
லண்டன்
**சேயோன் - அ.இரவி**
**மணி - அகிலன்**
கனடா
**தயா - பொன்.விவேகானந்தன்**
பாரிஸ்
**சிறி**
ஜேர்மனி
**சபேசன் - சாந்தி**
சுவிஸ்
**சயந்தன்**
பொறுப்பாசிரியர்
**- கோபி -**
மக்கள் தொடர்பு
**பாலா**
விளம்பரம்
**கௌரி - சிந்து**
அச்சு
**குமார் (ஜெர்மனி)**
வடிவமைப்பு
**jasmine studio**
முகப்பு வடிவமைப்பு
**seven zero graphics**
விளம்பர வடிவமைப்பு
**ரஜீவன் - கிரி**
தமிழ் எழுத்துரு உதவி
**சுரதா யாழ்வாணன்**
நிதி – நிர்வாகம்
**முருகானந்தன்**
வழங்கல்
**உதயகுமார்-ராஜு-கரன்**



**உங்கள் தொடர்புகளுக்கு:**
தொலைபேசி (Tel)
**லண்டன்** 020 7043 4310
**பாரீஸ்** 01 7289 8165
**சுவிஸ்** 043 500 0277
தொலைநகல் (Fax)
020 7043 4312
ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகளுக்கு:
**பணிமனை முகவரி**
**Oru Paper**
**45'B' Crusoe Road**
**Mitcham CR4 3L J**
**Surrey**
மின்னஞ்சல்:
**info@orupaper.com**
இணையம்:
**www.orupaper.com**



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# மரணம் மிகவும் வலியது

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

'மரணம் வாழ்வின் முடிவல்ல
சொற்களை விடவும்
செயல்களை விடவும்
உனது மரணம் மிகவும் வலியது'

என்ற சேரனின் கவிதையை என் வாய் முணுமுணுத்தது. அது எப்போதெனில் கேணல் சங்கர் பற்றிய கல்வெட்டான 'சங்கரண்ணா சாவு உனது முடிவல்ல' என்ற நூலை வாசித்து முடித்தபோது. லெப். கேணல் நிர்மலன் அவர்களால் தொகுக்கப் பெற்ற இந்நூல் செப்ரெம்பர் 2003இல் வெளி வந்தது. அதனை தோழர் கவிஞர் கருணாகரன் நவம்பர் 2003இல் எனக்கு வழங்கியிருந்தார். இப்போதுதான் அதனை வாசித்து முடித்தேன். வாசித்து முடித்தவுடன் புத்தகத்தின் பின் ஒற்றையில் இவ்வாறு எழுதினேன்.

11.6.08 புதன் கிழமை மாலை 7.10இற்கு வாசித்து முடித்தேன். இப்படி ஒருவரா? நம்மால் எண்ணிப் பார்க்க இயலுமா?

எனக்குள் அடிக்கடி எழுவது போல மீண்டும் ஒரு மனச்சாட்சி உறுத்தல். என்ன செய்கிறோம் நாம்? எமது தேசத்திற்கு, தாய்நாட்டிற்கு, தமிழீழ மண்ணுக்கு உழைக்காமல், இங்கிலாந்து நாட்டிற்கு உழைத்து கொட்டிக் கொண்டிருக்கிறோமே! எமது தேசத்தின் விடுதலைக்காகவும், வளத்திற்காகவும் எப்போது நாம் உழைக்கப் போகிறோம்? இந்த விதமாய் என்னுள் எப்போதும் கேள்வி எழும். அதற்கு பதில் சொல் அல்ல செயல் என்றும் உறுத்தும். மேலாக எந்த ஊறும் எனக்கோ, என் குடும்பத்திற்கோ நேராமல், நான் எழுதுவது சரியா என்றும் மனசு அடிக்கும். ஆயினும் எழுதுகிறேன்.

சொர்ணலிங்கம் என்ற இயற்பெயர் கொண்ட கேணல் சங்கர் 1949 செப்ரெம்பர் 18ஆம் நாள் விருட்சமாகி வாழ எழுகிறார். தியாகி திலீபனின் நினைவு நாளான 2001 செப்ரெம்பர் 26ஆம் நாள் விதையாகி வீழ்கிறார். ஐம்பத்தியிரண்டு வருடங்கள் அவர் வாழ்ந்த ஒவ்வொரு நாளுக்கும் மிகுந்த அர்த்தம் செறிய வைத்தார்.

கல்வி, கேள்வியில் உன்னதம், உதைப்பந்தாட்டம் இன்னும் பிற விளையாட்டுக்களில் விற்பன்னர். இவைபோக வீரத்தின் விளைநிலம். இவைதான் சங்கர். இவையெதுவும் புகழ்ச்சிக்காக புனையப்பட்ட வார்த்தைகள் அல்ல. அலங்கார சோடனைகளும் அல்ல. உண்மை. அதை உறுதிபடச் சொல்கிறேன்.

சொர்ணலிங்கம் என்ற இந்தத் தமிழ் மகன் மறவர்களில் முதல் மாவீரனான சங்கரின் பெயரைத் தனக்குச் சூட்டி 1980களின் ஆரம்பத்தில் களத்தில் குதிக்கிறான். ('ன்' என்று ஏகவசனத்தில் எழுத கை கூசுகிறது.) குதித்த காலத்திலிருந்து ஒரு நாளும் ஓயாது போருக்கு உழைத்தார். விடுதலைக்கு வீறாய் நின்றார்.

தம்பிமார் மனோகரன் (கப்டன் கரன்) வசீகரன் (லெப்.சித்தா) உதயகுமார் (சுதன்) என்ற மூன்று உடன் பிறப்புக்களை மாவீரர்களாக விடுதலைக் களத்துக்கு வித்தாகக் கொடுத்த போதும் மனம் கலங்கவில்லை. 05.10.87இல் லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட சயனைட் உட் கொண்டு சாவைத் தழுவிய பன்னிரு வேங்கைகளில் கப்டன் கரன் ஒருவர். அந்தச் செய்தி சங்கரண்ணாவுக்குத் தரப்படுகிறது. மனது குத்தி வலித்திருக்கும். ஆயினும் அதனிலும் பெரிது விடுதலை என்று அப்பால் கடமைக்குள் போனார்.

அவ்வாறுதான் 14.12.1987இல் நாவற்குழி இராணுவ முகாம் மீதான தாக்குதற் தயாரிப்பு வேலையில் ஈடுபட்ட லெப். கேணல் பொன்னம்மான் உட்பட பத்து வேங்கைகள் வீரச் சாவைத் தழுவிய போது அதில் ஒருவராய் லெப். சித்தார்த்தனும் இருந்தார்.

உதயகுமார் (சுதன்) தேச விரோதிகளால் சங்கரண்ணையின் சகோதரன் என்று அடையாளம் காணப்பட்டு கொல்லப்பட்டார். அப்போதெல்லாம் சங்கரண்ணாவுக்கு எப்படி இருந்திருக்கும்? 'எதையும் தாங்கும் இதயம்' என்று வெறும் வார்த்தைசாயம் காட்டாது உண்மையாக, உறுதியுடன், ஓர்மத்துடன் வாழ்ந்தார்.

நாமும் மனிதர். ஆனால் இப்படியெல்லாம் வாழ எம்மால் இயலாதிருக்கிறதே! அப்படிப் பார்க்கையில் அவர்கள் மனிதர்கள் இல்லையா? அதற்கும் மேலேயா? தெய்வத்துடன் வைத்து எண்ணப்படுவாரா? மகாத்மாக்கள் இவர்கள். அப்படித்தான் என்னால் சொல்ல முடிகிறது.

1977ஆம் ஆண்டே இவரது குடும்பம் தமிழீழக் கொள்கைக்கான முன்னெடுப்பில் இறங்கத் தொடங்கிவிட்டது. 1977இல் கப்டன் பண்டிதருடன், வசீகரன் (லெப். சித்தார்த்தன்) கிணற்று வெடி மருந்தை சேகரிக்கின்றார். (வெடி மருந்து வேறு எதற்கு) மனோகரனுக்கு (கப்டன் கரன்) திருமணம் பேசப்படுகிறது. அண்ணன் இருக்க தம்பிக்குத் திருமணமா? அண்ணன் (சங்கரண்ணை) 77இலேயே தம்பிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் 'தமிழீழம்தான் என் இலட்சியம். திருமணம் வேண்டாம். 7மணி பஸ் பழுதடைந்தால் 8மணி பஸ் போகவேணும்தானே போகட்டும்'

1978இல் தம்பியின் (கப்டன் கரன்) திருமணம் நடைபெறுகிறது. 83இல் இயக்கத்துக்கு ஒவ்வொருவராகச் செல்கின்றனர். 87இல் வசீகரனும், மனோகரனும் வீரச்சாவடைகின்றனர். மனோகரனின் மனைவி 'கைம்பெண்' ஆகிறார். ஐந்து வருடங்கள். அவர் இரண்டு பிள்ளைகளுடன் இருக்கிறார். அவாவை சங்கரண்ணை 90இல் கூப்பிட்டுவிட்டு 92இல் திருமணம் செய்கிறார். அவா ஒருநாள் சங்கரண்ணையிடம் கேட்கிறா 'இரண்டு வருசமா முடிவு செய்தியளா? என்ன குழப்பம்' சங்கரண்ணா சொல்கிறார் 'நீ திரும்ப விதவையாகக் கூடாதெண்ட காரணத்தாலை முடிவெடுக்க முடியேல்லை'

சங்கரண்ணா வீட்டிற்கு அதிகம் செல்வதில்லை. தந்தை ஒரு மாத காலம் 'படுத்த படுக்கையாக்' கிடந்து காலமானார். தகவலறிந்த சங்கரண்ணா வீட்டுக்குச் சென்று 'ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்' என்கிறார். 'எத்தனையோ பேர்...' முணுமுணுக்கிறார். 'எத்தனையோ போராளிகள் எப்படி எப்படியோ...' சொல்ல வாயெடுத்ததைத் தொடராமல் நிறுத்திப் பெருமூச்சுவிட்டார். இரவோடிரவா தகப்பனாரின் உடலை எடுத்துச் சென்று எரித்து செய்ய வேண்டியவற்றைச் செய்துவிட்டு வந்து தன் முகாமுக்கு உடனே புறப்பட்டார். 96 யூலை 14அம் நாள் இது நடந்தது. யூலை 17ஆம் நாள் முல்லைத்தீவு இராணுவ முகாம் புலிகள் வசம் வீழ்ந்தது.

சங்கரண்ணாவின் சாதனைகள் மிக மிக அதிகம். ஒரு புத்தகம் சொன்னதையும் சொல்லாமல் விட்டதையும் இந்தப் பத்திக்குள் அடக்குதல் இயலாது. முக்கியமானதும், முதன்மையானதும் இதுதான். இந்திய ஆக்கிரமிப்புப் படைக் காலத்தில் வன்னிக் காட்டை போராளிகள் வசப்படுத்தியபோது அதன் வலிமையாக நின்றார் சங்கரண்ணா. அப்போது அவர் ஆற்றிய பணி மலையை விட கடினமானது. இரும்பைவிட இறுக்கமானது. தலைவரது பாதுகாப்பும் இவர் பார்வையிலேயே இருந்தது. கேணல்கள் பால்ராஜ், சூசை, பொட்டம்மான், தீபன், சொர்ணம், பானு போன்றோர் சங்கரண்ணா பற்றி விபரித்து கூறுகையில் உடல் சிலிர்க்கிறது. சங்கரண்ணா எழுதிய வரிகளுடன் இப்பத்தியை நிறைவு செய்கிறேன்.

'எமது கல்லறைகளின் முன்னால் நின்று ஒப்பாரி வைக்காதீர்கள். நாம் இங்கு இல்லை; நாம் இறப்பதில்லை'

# நாணுடைமை

## வள்ளுவர் காட்டும் வழி

எழுதுவது: **இராம. கே. நாதன்**

பெண்கள் நாணுதல் ஒருவகை. ஆனால் பழிக்கு அஞ்சி நாணுதல் அதிலிருந்து மாறுபட்டது. தகாத செயல்களைச் செய்வதனால் தலைகுனிந்து வெட்கப்படுவதையே இங்கே வள்ளுவர் (நாண்) எனக் கூறுகிறார். இந்த வெட்கத்திற்கும் பெண்களுக்கு இயல்பாக உண்டாகும் வெட்கத்திற்கும் வித்தியாசம் உண்டு. (குறள் 1011).

ஆனால் இந்த வெட்கம் எல்லோருக்கும் வந்துவிடுவதில்லை. எவன் சீரான வாழ்க்கை வாழ முயல்கிறானோ அவனுக்கே இப்படியான தலைகுனிவு ஏற்பட இடமுண்டு. உணவு, உடை, உடல் உபாதைகள் எல்லா மனிதருக்குமே பொதுவானவை தான். ஆனால் எவன் ஒருவன் தனது தகாத செயல்களினால் தனக்குப் பழிவந்து விடுமோ என அஞ்சுகிறானோ அவன் மற்றைய மனிதர்களிலிருந்து வேறுபடுகிறான். அவனது பழிக்குப் அஞ்சி நாணும் பண்பு அவனை மற்றவர்களிடமிருந்து உயர்ந்தவனாக்கி விடுகிறது. (குறள் 1012).

உடல் இருக்கும் வரை அந்த உடலில் உயிர்கள் வாழமுடியும். அவை சாதாரண வாழ்க்கையாகும். ஆனால் ஒரு சான்றோனது வாழ்க்கை சாதாரண வாழ்க்கையாக இருப்பதில்லை. அவன் சாதாரண மனிதர்களிலிருந்து வேறுபட்டு நிற்கிறான். அப்படி அவனை வேறுபடுத்துவது அவனது பண்பு ஆகும். அந்தப் பண்பை அவனுக்கு அளிப்பது அவனது பழி அஞ்சும் குணம் ஆகும். அவனது பண்பின் சிறப்பை எடை போட உதவுவது அவன் எவ்வளவு தூரம் பழிக்கு அஞ்சுகிறான் எனும் தன்மையேயாகும். (குறள் 1013).

சான்றோரைப் பிறரிலிருந்து உயர்ந்து நிற்கச் செய்வது அவர்களது பண்பு ஆகும். அவர்களது உயர்ந்த குணம் ஆகும். அப்படியான சான்றோர்க்கு அணிகலன்களாக இருப்பவை அவர்களது பழிக்கு அஞ்சும் குணமாகும்.

அத்தகைய குணம் கொண்டோர் மாத்திரமே சான்றோர் எனப் போற்றப்படுவர். அத்தகைய பழிக்கு நாணும் குணம் இல்லாதவர்கள் எவ்வளவு தான் தாம் சான்றோர்கள் என தம்மை வெளிகாட்ட முயன்றாலும் அது போலி என்பது எல்லோருக்கும் தெரிந்துவிடும். அவர்கள் வீறு நடை போட்டாலும் அது நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவனது நடையை ஒத்ததாக இருக்கும். (குறள் 1014).

பழிக்கு அஞ்சும் குணமுடையோர் தமக்குப் பழி வரும் போது மாத்திரமன்றி பிறருக்குப் பழிவந்தாலும் அது தமக்கு நேர்ந்த பழிபோல வெட்கப் படுவர். இவர்களுக்கு பழி என்பது ஒரு இழிவு ஆகும். அது தமக்கு நேர்ந்தாலென்ன அல்லது பிறருக்கு நேர்ந்தாலென்ன தாம் வேதனைப் படுவர், வெட்கப்படுவர். இப்படிப்பட்டோரிடமே பெருமை சேரும். அறம் குடிகொண்டிருக்கும். (குறள் 1015).

உலகை மாற்ற வேண்டுமென எண்ணுகின்ற உத்தமர்கள், தமது செய்கைகளை அறவழி நின்றே செயற்படுவர். எவராக இருந்தாலென்ன அது ஒரு நாட்டின் தலைவராக இருந்தாலென்ன, ஒரு நிறுவனத்தின் தலைவராக இருந்தாலென்ன தமக்கு நலம் கிடைக்க வேண்டுமென்பதற்காகவோ, பொருள் சேரவேண்டுமென்பதற்காகவோ தகாத வழிகளைக் கையாளமாட்டார்கள். எது செய்யினும் பிறர் பழிப்பதில்லாது இருத்தல் வேண்டும் என விரும்புவர். போரில் ஈடுபடும்போது கூட அறவழியில் நின்றே போரிடுவர். இன்று போய் போருக்கு நாளை வா எனக் கூறிய இராமன் வழி அறவழி. அவ்வாறு அறவழியில் நடப்போரே உயர்ந்தோர் என மதிக்கப்படுவர். (குறன் 1016).

இத்தகைய உயர்ந்த பண்புடைய மக்கள் தமக்குப் பழிவந்த இடத்து தமது உயிரையே துறக்கத் தயாராக இருப்பர். தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பழி தரும் காரியங்களில் ஈடுபட மாட்டார்கள். தமது உயிர் போனாலும் பரவாயில்லை தமது பண்பையே காக்க நினைப்பர். தமது கற்பை இழந்தால் தமக்குப் பழி வந்து விடுமே என வெட்கி தமது உயிரையே போக்கிக்கொண்ட பல பெண்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். (குறள் 1017).

பிறர் எதைத் தகாத காரியம் என வகுத்துள்ளார்களோ அதை ஏற்றுக்கொள்ளாது தமது எண்ணப்படி நடப்பவர்களைப் பார்த்து அறமே சிரிக்கும். எனவே எது தகாத காரியம் என சமூகம் கருதுகிறதோ அதை அச் சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ளுதலே பண்பாகும். அதை விடுத்து சமூகம் என்ன சொன்னாலும் பரவாயில்லை நான் எனது விருப்பப்படியே நடப்பேன் என நடந்து கொள்பவர்கள் சமூகத்தினால் தூற்றப்படுவர். அதையே திருவள்ளுவர் அறமே சிரிக்கும் என்று கூறுகிறார். (குறள் 1018).

சமூகக் கட்டுப்பாடுகளை மீறி நடப்பவன் தனது குலப் பெருமைகளை இழப்பான். எவ்வளவு உயர்ந்த குடியில் பிறந்திருந்தாலும், அவனது நடவடிக்கைகளினால் அவன் உலகத்தோரால் பழிக்கப்படுவான். ஆனால் அந்தப் பழிக்குப் அவன் வெட்கப்படாவிடின் அவன் தனது வாழ்க்கையில் பெறக்கூடிய எல்லா நலன்களையுமே இழந்தவனாவான். (குறள்1019).

பிறருடைய பழிச் சொற்களுக்கு வெட்கப் படாதவன் உயிரற்ற மரத்துண்டிற்குச் சமமாவான். அவனது செயல்களும், அசைவுகளும் கயிற்றினால் கட்டி ஆட்டப்படுகின்ற மரப் பொம்மையையே ஒத்திருக்கும்.(குறள் 1020).